# எம்.டி.சி.ஆர்.சி தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் அன்னையர் தினம்

கோவையில் எம்.டி.சி.ஆர்.சி தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் அன்னையர் தினம் கொண்டாப்பட்டது.

கோவை இராமநாதபுரத்தில் ஆர்ய வைதிய பார்மசியில் எம்.டி.சி.ஆர்.சி தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக முனைவர் ஜெயந்தி ஸ்ரீ பாலகிருஷ்ணன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இதற்கு முன்னதாக அன்னையர்களுக்கான விளையாட்டு, வேடிக்கை, திறன் வெளிபடுத்தும் போட்டிகள் நடத்தப்பட்டது.தசை சிதைவு நோய் ஏற்படும் குழந்தைகளுக்கு 13 ஆண்டுகளாக எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காமல் இலவச மருத்து சேவை ஆற்றிவருகின்றது எம்.டி.சி.ஆர்.சி தொண்டு நிறுவனம், தசைசிதைவு நோயை பற்றி கூறிய முனைவர் டாக்டர் லட்சுமி சுமார் உலகம் முழுவதும் 3500 குழந்தைகளில் ஒரு குழந்தை பாதிக்கபடுகின்றது.



மேலும் இது மரபு வழியாக வரும் நோய் என கண்டுபிடித்துள்ளனர். பெரும்பாலும் ஆண்குழந்தைகள் இந்நோயால் பாதிப்படைகின்றனர். எம்.டி.சி.ஆர்.சி தனது குடும்ப ஆதரவு சேவைகள் மற்றும் ஆராய்ச்சி மையம் மூலமாக குழந்தைகளின் வாழ்க்கை தரம் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வருகின்றது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நன்கு முரிந்து கொண்டு பராமரிப்பதை பொறுத்தே குழந்தைகளின் வாழ்க்கை தரம் அமைகின்றது குழந்தைகளை கவனித்துக்கொள்ளும் பெற்றோர்களின் மனநிலையை மனதில் கொண்டே இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. மேலும் இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர் முனைவர் ஜெயந்தி ஸ்ரீ பாலகிருஷ்ணன் பேசுகையில் உறவுகளின் கூட அளவிட்டுதான் பழக முடியும் ஆனால் அம்மா என்ற உறவுக்கு மட்டும் தான் அளவே இல்லை என பேசினார். குழந்தைகளின் வாழ்வில் அன்னையரின் மகத்துவம் குறித்து பேசினார். இந்த நிகழ்ச்சியில் குறிஞ்சி மருத்துவ மனை நிறுவனர் கே.சி.ராமசாமி, மருத்துவர் லட்சுமி ஆகியோர் பங்கேற்றனர்.